# சிலம்பில் கதை நிகழ்ச்சியும் காலக்குறிப்பும்

## [டாக்டர் ந. வீ. செயராமன்]

சிலப்பதிகாரக் கதை, சோழ நாட்டுப் புகாரில் தொடங்கி, பாண்டிய நாட்டு மதுரையில் தொடர்ந்து, சேரநாட்டு வஞ்சியில் நிறைவு பெறுகிறது. கோவலன், கண்ணகி, மாதவி என்ற மூன்று தலைமக்களின் வாழ்வோடு இணைந்த இக்காப்பியக் கதையின் நிகழ்ச்சிகள் உரிய காலக் குறிப்புகளோடு, கால முரண்பாடு தோன்று வண்ணம், ஆங்காங்கே சுட்டிக் கூறப்பட்டுள்ளன. ஒரு நிகழ்ச்சிக்குரிய கால அளவு, இரு நிகழ்ச்சிகளுக்கு இடையே அமைந்த கால எல்லை, பல்வேறு நிகழ்ச்சிகளுக்குரிய காலத் தொடர்ச்சி மற்றும் கால இயைபு ஆகியன பற்றிய குறிப்புகளின் துணையால், கால உணர்வோடு நிகழ்ச்சிகளைத் தொடர்ந்து சென்று துய்க்க இயலுகிறது. இக் குறிப்புகளை இயைபுபடுத்தி ஆராய்வதன் மூலம், காப்பியக் கதையின் முழுமையான கால அளவு, காண்ட நிகழ்ச்சிகளுக்குரிய கால எல்லை, காதை நிகழ்ச்சிகளுக்கும் இன்றியமையாத கதை நிகழ்ச்சிகளுக்கும் உரிய காலக் குறிப்பு முதலியவற்றைத் தெளியலாம்.

பண்டைத் தமிழ் மக்கள், காலக் கணக்கும் காலக் கணிப்பும் பற்றித் தெளிந்த அறிவு கொண்டிருந்தனர். பட்டினப் பாக்கத்தில், காலக் கணிதர் (5:44),[1] நாழிகைக் கணக்கர் (5:49) ஆகியோரின் குடியிருப்புகள் உள என்றும், மன்னர்கள் படை எடுத்துச் செல்லும்போது, உடன் செல்வோரில் காலக் கணிதரும் இருந்தனர் (27:148) என்றும் சிலம்பில் வரும் குறிப்புகளால் இச்செய்தியை அறியலாம். இம் முறையில், காலக் கணிப்புப் பற்றித் தமிழர் கொண்டிருந்த தெளிந்த உணர்வு, தமிழர்தம் முதற்காப்பியமான சிலம்பிலும், கதை நிகழ்ச்சிகள் வாயிலாகச் சீரிய முறையில் வெளிப்பட்டுள்ளது.

### திருமணம்

சிலம்பின் முதற்காதையான மங்கல வாழ்த்துப் பாடல், கோவலன் கண்ணகியின் திருமண நிகழ்ச்சியை விளக்கும் பகுதி. திருமணத்தின்போது, கண்ணகி "ஈராறுண்டு அகவையாள்" (1:24) என்றும், கோவலன் ஈரெட்டாண்டு அகவையான்" (1:34) என்றும் கூறப்பட்டுள்ளனர். "அகவை" என்ற சொல்லுக்கு "உட்பட்டது" என்பது பொருள். எனவே கண்ணகி, கோவலன் வயதைக் குறிப்பிட "அகவை" என்ற சொல் பயன்படுத்தப்பட்டிருத்தலால், திருமணத்தின்போது, கண்ணகிக்கும் கோவலனுக்கும் முறையே 12, 16 ஆண்டுகள் "நிறையவில்லை" என அறியலாம். திருமணத்தின்போது, தலைவிக்கும் தலைவனுக்கும் உரிய 12, 16 ஆண்டுகளில், இரண்டு மாதங்கள் குறைவாகவே இருத்தல் வேண்டும் என்பதை,

களவினுள் தவிர்ச்சி வரைவின் நீட்டம்
திங்கள் இரண்டின் அகமென மொழிப[2]

என்ற நூற்பா உணர்த்துகிறது.

இக்குறிப்பினால், திருமணத்தின்போது, கண்ணகியின் வயது பதினோரு ஆண்டும் பத்துத் திங்களும் என்றும், கோவலனின் வயது பதினைந்து ஆண்டும் பத்துத் திங்களும் என்றும் அறியலாம்.

---

1. அடைப்புக்குறியில் உள்ள முதல் எண் காதையையும், இரண்டாம் எண் அடியையும் குறிப்பிடுகின்றன.
2. இறை, கள, அகத், நூ. 32

இவர்கள் திருமணம், சந்திரன் உரோகிணி நட்சத்திரத்துடன் கூடிய நாளில் நிகழ்ந்ததை, "வானூர் மதியம் சகடணைய" (1:50) என வரும் தொடராலும், இந்நாளே, திருமணத்துக்குரிய நன்னாளாகக் கருதப்பட்டதை, "ஒரு பெருநாளால் மணவணி காண மகிழ்ந்தனர்" (1:41-42) என வரும் தொடராலும் இளங்கோவடிகள் குறிப்பிட்டுள்ளார். சந்திரன் உரோகிணியோடு கூடிய நாளைப் பண்டைத் தமிழர் திருமண நன்னாளாகக் கொண்டு போற்றினர் என்பதை

அங்கண் இருவிசும்பு விளங்கத் திங்கள்
சகட மண்டிய துகள்தீர் கூட்டத்து[3]

என வரும் பகுதியும் கூறியுள்ளது.

மனைவாழ்க்கை

கோவலன் கண்ணகி இருவரையும் தனிக் குடும்பம் வைத்ததையும், இவர்கள் தனிக் குடும்ப வாழ்வு சில ஆண்டுகள் நிகழ்ந்ததையும்,

வேறுபடு திருவின் வீறுபெறக் காண
உரிமைச் சுற்றமோடு ஒருதனி புணர்க்க
யாண்டு சில கழிந்தன இற்பெருங் கிழமையிற்
காண்டகு சிறப்பிற் கண்ணகி தனக்கென் (2:87-90)

என வரும் பகுதி சுட்டியுள்ளது. இத்தனிக் குடும்ப வாழ்வு எவ்வளவு ஆண்டுகள் நிகழ்ந்தது என்பதற்குத் தெளிவான கால அளவு இங்குக் கூறப்படவில்லை. எனினும் தேவந்தியின் வாழ்க்கையோடு தொடர்புடைய ஒரு காலக் குறிப்பினால், இச்செய்தியை நாம் உய்த்துணரலாம்.

தேவந்தி, கண்ணகியின் பார்ப்பனத்தோழி; இவள் இளமை முதலாகவே மாநாய்கன் மனையில் வளர்ந்தவள்; கண்ணகியின் திருமணத்தை ஒட்டியே இவள் திருமணமும் நிகழ்ந்தது; கோவலன், கண்ணகியைவிட்டுப் பிரிந்தபோது, ஏறத்தாழ இவளும் தன் கணவன் சாத்தனை விட்டுப் பிரிந்தாள். இங்ஙனம் அடியார்க்கு நல்லார் குறிப்பிட்டுள்ளார்.[4] தேவந்தியும் கண்ணகியும் தனியராய் இருந்து உரையாடும் காட்சியைக் கனாத்திறமுரைத்த காதை கூறுவதாலும் இதனை அறியலாம்.

தேவந்தி தன் கணவன் சாத்தனோடு மனைவாழ்க்கை நிகழ்த்திய காலம் எட்டு ஆண்டுகள். இதனை,

தேவந் திகையைத் தீவலம் செய்து
நாலீ ராண்டு நடந்ததற் பின்னர் (30:84-85)

என வரும் பகுதி சுட்டுகிறது. எனவே, தேவந்திக்கும் கண்ணகிக்கும் பிரிவும் திருமணமும் ஒத்த காலத்தில் நிகழ்ந்தனவாகக் கொள்ளவே, தேவந்தி சாத்தனோடு எட்டு ஆண்டுகள் வாழ்ந்ததுபோல, கண்ணகியும் கோவலனோடு எட்டு ஆண்டுகள் தனிக் குடும்ப வாழ்வு நடத்தினாள் என அறியலாம்.

3. அகம், பா. 136:4-5
4. "இவட்கு அவள் இளமைப் பருவந் தொடங்கி நிகழும் பார்ப்பனத் தோழியாய், மாநாய்கன் மனை வளர்தலின், ஒரு காலத்தே குடிபுக்குச் செல்கின்றுழிப் பிரிவும் ஒரு காலத்தாயிற்று என்பதாகலின், நாலீராண்டு நடந்ததற் பின்னர் என்பதனை இருவர்க்குமாக்கி......" ...சிலம்பு. 2:84-90. அடி. நல், உரை விளக்கம்.

## மாதவியுடன் வாழ்தல்

மாதவியின் நடன அரங்கேற்றம் பற்றிய செய்திகள் அரங்கேற்று காதையில் மொழியப் பெற்றுள்ளன. இவள், தன் ஐந்தாவது வயது முதலாக நாட்டியப் பயிற்சி பெறத் தொடங்கினாள்; ஏழு ஆண்டுகள் இக்கலையைக் கற்றுத் தேர்ந்தாள்; தன் பன்னிரண்டாம் வயதில், மன்னன் முன்னிலையில் அரங்கேறினாள். இதனை;

ஏழாண் டியற்றியோர் ஈரா றாண்டில்
சூழ்கழல் மன்னற்குக் காட்டல் வேண்டி *(3:10-11)*

என்ற பகுதி உணர்த்துகிறது. "மற்றவளை ஐயாண்டு நிரம்பிய பின்றைக் காண்போர் காண அரங்கிற் கிரமம் இருபொழுது ஏழாண்டு இயற்றுவித்து இப்படியாற் பன்னீராண்டு பிராயம் புக்க பின்பு" என்ற அரும்பதவுரைகாரர் குறிப்பும் இச் செய்திகளைத் தெளிவுறுத்தும்.

குலமகளாகிய கண்ணகிக்குப் பன்னிரண்டாவது வயதில் திருமணம் நிகழ்ந்தது போல, கலைமகளாகிய மாதவிக்குப் பன்னிரண்டாவது வயதில், குலமரபுக்கேற்ப, நாட்டிய அரங்கேற்றம் நிகழ்ந்தது என அறியலாம்.

கோவலன், கண்ணகியை விட்டுப் பிரிந்து, மாதவியோடு விடுதல் அறியா விருப்பினனாகிப் பல ஆண்டுகள் வாழ்ந்தான். கோவலன் மாதவியோடு எவ்வளவு காலம் வாழ்ந்தான் என்பதற்கு நூலில் சான்றுகள் இல. இக்காலத்தில் நடந்தனவாக மணிமேகலை பிறத்தல், மணிமேகலைக்குப் பெயர் சூட்டு விழா நிகழ்த்துதல் முதலிய நிகழ்ச்சிகளை அடைக்கலக் காதையால் அறிகின்றோம்.

கோவலன் கண்ணகியோடு வாழ்ந்த எட்டு ஆண்டுகளுக்கு மேலும் சில ஆண்டுகள் மாதவியோடு வாழ்ந்தான் எனத் தெரிகிறது. "கண்ணகிக்குச் சிலயாண்டு கழிந்தனவெனவே மாதவிக்குப் பலயாண்டு கழிதலும் கொள்ளப்பட்டது" என்ற உரைவிளக்கத்தால்,5 எட்டு ஆண்டுகட்கு மேற்பட்ட சில ஆண்டுகள் வரை கோவலன் மாதவியோடு வாழ்ந்திருத்தல் வேண்டும் என அறிய முடிகிறது.

மணிமேகலை, தன் தோழி சுதமதியோடு மலர் தொடுக்கும் வேளையில், கோவலன் உயிரிழந்த துன்பத்தால் கண்ணீர் சொரிந்தாள் எனவரும் மணிமேகலையின் மலர் வனம் புக்க காதைச் செய்தியாலும், இதன் பின்னர் மணிமேகலை துறவு பூண்டாள் எனவரும் சிலம்பின் நீர்ப்படைக்காதைச் செய்தியாலும், கோவலன் கொலைப் பட்ட வேளையில் மணிமேகலைக்கு ஏறத்தாழ பன்னிரண்டு வயது இருக்கலாம் என உணர முடிகிறது. இக்குறிப்புகளால், கோவலன் மாதவியோடு இணைந்து வாழ்ந்த காலம் ஏறத்தாழ 12 முதல் 15 ஆண்டுகளாக இருத்தல் வேண்டும் எனத் தெளியலாம்.

## இந்திர விழா

சிலப்பதிகாரக் கதையின் முக்கியமான நிகழ்ச்சிகள் இந்திர விழா முதலாகவே தொடங்குகின்றன. "பசியும் பிணியும் பகையும் நீங்கி, வசியும் வளனும் சுரக்க" வேண்டும் *(5:72-73)* என்பது இவ்விழாவின் நோக்கம். திருமணம் நிகழ்ந்த வயது, கண்ணகியோடும் மாதவியோடும் வாழ்ந்த காலம் ஆகிய இவற்றைக் கூட்ட, கோவலனுக்கு ஏறத்தாழ 36 முதல் 39 வயது நிகழும்போது நடந்த இந்திர விழா நிகழ்ச்சிகள் இங்குக் குறிப்பிடப்பட்டுள்ளன எனக் கொள்ளலாம்.

ஆண்டுதோறும், சித்திரை மாதத்தில் சித்திரை நட்சத்திரம் கூடிய நிறைமதி நாளில் இவ்விழா தொடங்கி, 28 நாட்கள் நடந்து முடிந்து, வைகாசி நிறைமதி நாளில் வைகறைப் போதில் மக்கள் கடலாடி மகிழ்வதோடு இவ்விழா நிறைவு பெறும் எனச் சிலம்புக் குறிப்புகள் இவ்விழாச் செய்திகளைக் கூறுகின்றன.

---

5. சிலம்பு 2:84-90. அடி. நல். உரைவிளக்கம்.

விழா தொடங்கும் நாளே, "சித்திரைச் சித்திரைத் திங்கள் சேர்ந்தென" (5.64) எனச் சிலம்பும், "சித்திரா பூரணையென்க" என அரும்பதவுரைகாரர் குறிப்பும் சுட்டியுள்ளன. "விழாக்கோள் எடுத்த நாலேழ் நாளினும் (7-8) என்ற மணிமேகலை விழாவறைக் காதைப் பகுதியும், "விழவிற்குக் கொடியெடுத்த நாள் முதல் நாலேழ் நாளும் விழவு நடந்து" என்ற அடியார்க்கு நல்லார் உரைப் பகுதியும்,6 இவ்விழா 28 நாட்கள் நடப்பதைக் குறிப்பிட்டுள்ளன.

சித்திரை மாதத்தில் சித்திரை நட்சத்திரம் கூடிய நிறைமதி நாளில், விழா தொடங்கிய நாள் அன்று, சித்திரை மாதம் 28ஆம் தேதி என அடியார்க்கு நல்லார் குறிப்பிட்டுள்ளார்.7 பிற கதை நிகழ்ச்சிகளின் காலக் கணிப்பிற்கு ஒத்த வகையில் அடியார்க்கு நல்லார் குறிப்பிட்ட இத்தேதி, பொருத்தமாக அமைந்துள்ளது. இதே பகுதியில், அவர் கூறிய சோதிடக் கணக்குகள் பிறவெல்லாம் பொருத்தமின்றி அமைந்துள எனச் சான்றோர் மறுத்துள்ளனர்.8 எனவே, சிலப்பதிகாரத்தில், இன்றியமையாத கதை நிகழ்ச்சிகளின் தொடக்கத்தில் குறிப்பிடப்பெற்ற இந்திர விழா அவ்வாண்டின் சித்திரை மாதம் 28ஆம் தேதியன்று நிறைமதி நாளில் தொடங்கியது என அறியலாம்.

## கண் துடித்தல்

இந்திர விழவூரெடுத்த காதையின் இறுதிப் பகுதியில், கண்ணகியின் இடக் கண்ணும் மாதவியின் வலக்கண்ணும் துடித்தன என்ற செய்தி குறிப்பிடப்பட்டுள்ளது.

கண்ணகி கருங்கணும் மாதவி செங்கணும்
உண்ணிறை கரந்தகத் தொளித்துநீர் உகுத்தன
எண்ணுமுறை இடத்தினும் வலத்தினும் துடித்தன (5:237-239)

என்பது அப்பகுதி. இவ்விழாவிற்குப் பின்னர், கண்ணகி, கோவலனோடு கூடி வாழப் போகும் இன்பச் செய்தியையும், மாதவி, கோவலனோடு பிரிந்து வாழப்போகும் துன்பச் செய்தியையும் "கண்துடித்தல்" என்னும் நிகழ்ச்சி உணர்த்துகிறது. பின்னே நிகழவிருக்கும் இன்ப, துன்பச் செய்திகளை முன்னரே அறிவிக்கும் அடையாளமாகக் "கண்துடித்தல்" நிகழ்ச்சி இங்குச் சுட்டப் பெற்றுள்ளது.

"கண்துடித்தல்" என்னும் நிகழ்ச்சி, இந்திர விழாவின் இறுதி நாளுக்கு முன்னாள் நடந்ததாகும். இதனை, "விழவு நாளகத்தென்றார், தீர்த்தத்தின் முன்னாள் என்பது உணர்த்தற்கு" என வரும் விளக்கத்தால்9 தெளியலாம்.

## பதினோராடல்

இந்திர விழாவின்போது, மாதவி, கொடுகொட்டி, பாண்டரங்கம், அல்லியத் தொகுதி, மல்லாடல், துடிக்கூத்து, குடைக்கூத்து, குடக்கூத்து, பேடிக்கூத்து மரக்காலாடல், பாவைக்கூத்து, கடையக்கூத்து என்ற பதினோரு வகை ஆடல்களை ஆடினாள் (6:40-66). இதன் பின்னர், இந்நிகழ்ச்சியால் வெறுப்புற்றிருந்த கோவலன் உவக்கும்படி, நன்னீரில் நீராடித் தன்னை ஒப்பனை செய்துகொண்டு, அன்றிரவு கோவலனோடு கூடியும் ஊடியும் களித்தாள் என்ற செய்தியை,

கூடலும் ஊடலும் கோவலற்கு அளித்துப்
பாடமை சேக்கைப் பள்ளியுள் இருந்தோள் (6:109-110)

என வரும் பகுதி சுட்டுகிறது.

6. சிலம்பு, 6:111-114, அடி. நல். உரைவிளக்கம்.
7. சிலம்பு, 10:1-3, அடி. நல். உரைவிளக்கம்.
8. சிலம்பு, உ.வே.சா. பதிப்பு, 1968, ப.267
9. சிலம்பு 5:235-240, அடி.நல். உரைவிளக்கம்.

இக்குறிப்புகளால், இந்திர விழாவின் இறுதி நாளாகிய 28-ஆம் நாளன்று மாலையில் மாதவியின் பதினோராடல் நிகழ்ச்சி நிகழ்ந்தது என்றும், அன்று இரவு மாதவியும் கோவலனும் கூடியும் ஊடியும் களித்தனர் என்றும் உணரலாம்.

கடலாடுதல்

இந்திர விழாவின் இறுதி நாள் வைகாசி நிறைமதி நாள். இந்நாளில் நிறைமதி நிறைந்த வைகறையில், மக்கள் கடலாடி மகிழ்வர். பின், மறுநாள் முழுதும் கடற்கரையில் தங்கிப் பொழுதை மகிழ்ச்சியாகக் கழிப்பர்.

கடற்கரையில் ஆங்காங்குத் தங்குவதற்குரிய வாய்ப்பான இடத்தைப் பிடிப்பதற்கு, மக்கள், வைகறைப்போதில் கடற்கரைக்குச் சென்றனர் என்பதை,

பொய்கைத் தாமரைப் புள்வாய் புலம்ப
வைகறை யாமம் வாரணங் காட்ட
வெள்ளி விளக்கம் நள்ளிருள் கடிய (6:115-117)

என வரும் பகுதி விளக்குகிறது. தாமரையில் உறங்கிய பறவைகள் வாய்விட்டுப் புலம்புகின்றன; கோழிகள் கூவுகின்றன; வெள்ளி முளைத்து இருளைப் போக்குகிறது என வைகறைப் போதுக்குரிய நிகழ்ச்சிகள் இப்பகுதியில் கூறப் பெற்றிருத்தலால், மக்கள் கடற்கரைக்குச் சென்ற காலம் வைகறைப் பொழுதே என அறியலாம். கோவலன் கோவேறு கழுதையிலும், மாதவி கொல்லாப் பண்டியிலும் ஏறிக் கடற்கரைக்குச் செல்லுங்கால், பட்டினப்பாக்க ஆவண வீதிகளில் "மலரணி விளக்கத்து மணிவிளக்கும்" (6.123), மருவூர்ப்பாக்க வீதிகளில் வணிகர்களின் பல்வேறு விளக்குகளும் (6:134-145) நிறைந்திருந்தன என்ற குறிப்புகளும் இக் கருத்தை உறுதி செய்கின்றன.

மக்கள் உவாநாளில் கடலாட்டுக்குச் செல்லும் இந்நிகழ்ச்சி, இந்திர விழாவின் இருபத்தெட்டாம் நாளன்று கொடியிறக்கி விழாவாற்றுப்படுத்த பின்னர், மறுநாள் பொழுது புலர்வதற்கு முன் வைகறையில் நடைபெற்றதாகும். இதனை "விழவிற்குக் கொடியெடுத்த நாண்முதல், நாலேழ் நாளும் விழவு நடந்து, பிற்றை ஞான்று கொடியிறங்கி விழாவாற்றுப்படுத்த பிற்றை ஞான்று உவாத்தலை வந்ததாக" என அடியார்க்கு நல்லார் குறிப்பிட்டிருப்பதாலும்[10], "இருபத்தெட்டு நாளும் விழா நடந்து, கொடியிறங்கி விழாவாற்றுப்படுத்த பின்னுளிலே உவா வந்ததாகலின் கடலின் கண் நீராடச் செல்வாராயினர்" என வேங்கடசாமி நாட்டார் குறிப்பிட்டிருப்பதாலும்[11] அறியலாம்.

மக்கள், வைகறைப்போதில் கடலாடி மகிழ்ந்த களங்கள், கரிகாலன் புதுப் புனல் விழவு கொண்டாடும் தலைநாளில், மக்கள் புனலாடுகின்ற இடங்கள் போல வீறு பெறத் தோன்றின (6:159-165) என உவமை வாயிலாகவும் இளங்கோ, இக்காட்சியை விளக்கியுள்ளார்.

கடலாடு காதையின் இறுதியில், வைகறைக் காலத்து நிகழ்ச்சியைச் சுட்டும் வகையில் "வேலை மடற்றாழை" என்னும் வெண்பா[12] கூறப்பட்டிருத்தலாலும் மக்கள் கடலாடிய நிகழ்ச்சி வைகறைக்குரியதே என அறியலாம்.

---

10. சிலம்பு 6:111-114, அடி. நல். உரை.
11. சிலம்பு 6:111-114, ந.மு.வே. உரை விளக்கம்.
12. வேலை மடற்றாழை உட்பொதிந்த வெண்டோட்டு
மாலைத் துயின்ற மணிவண்டு – காலைக்
களிநறவந் தாதூதத் தோன்றிற்றே காமர்
தெளிநிற வெங்கதிரோன் தேர்.

## கானல் வரி

சிலப்பதிகாரக் கதையில், கோவலனும் மாதவியும் கடற்கரையில் கானல் வரிப் பாடல்கள் பாடிய நிகழ்ச்சி, ஒரு திருப்பு முனையாக விளங்கும் பெற்றி உடையது. இந்திர விழாவின் இறுதி நாளுக்குப் பின்னர், மறுநாள் காலை முதல் மாலைவரை நடந்த நிகழ்ச்சிகள் "கானல்வரி"யில் கூறப்பட்டுள்ளன.

வைகறையில் கடலாட்டு முடிந்த பின்னர், அங்கு அமைக்கப்பட்டிருந்த கூடாரத்தில் கோவலனும் மாதவியும் யாழிசைத்துக் கானல்வரிப் பாடல்களைப் பாடினர். கோவலன் பாடி, பின்னர் மாதவியும் பாடி முடிக்கும்போது மாலைக் காலம் தொடங்கிவிட்டது. ஒரு நாளின் பல்வேறு பொழுதுகளுக்கும் தனித்தனியே பாடுதற்குரிய பண்கள் உள. எனவே, மாலைக்காலம் வந்துவிட்டதால், அக்காலத் துக்கு உரிய பண்ணைப் பாடும் முறையில், யாழில் செவ்வழிப்பாலை என்னும் மாலைக்கால இசையை எழுப்பித், தான் இதுவரை பாடிய பண்ணை மாற்றி, மாதவி, வேறொரு பண்ணில் பாடத் தொடங்கினாள்.

தீந்தொடைச் செவ்வழிப் பாலையிசை எழீஇப்
பாங்கினிற் பாடியோர் பண்ணுப் பெயர்த்தாள் *(7:47:3-4)*

என்னும் பகுதி இச்செய்தியைச் சுட்டுகிறது. மாலைக் காலத்துக்கு உரிய பண்ணை மாற்றிப் பாடியபோது,

பையுணோய் கூரப் பகல்செய்வான் போய்வீழ
வையமோ கண்புதைப்ப வந்தாய் மருண்மாலை *(7:50:1-2)*

என மாலைப் பொழுதையே பொருளாகவே வைத்து, மாதவி பாடியதாக வரும் முகமில் வரிப் பகுதியும் இதனை வலியுறுத்துகிறது.

மாதவி "தான் ஒன்றின்மேல் மனம் வைத்துப் பாடினள்" *(7:52.2)* என எண்ணிய கோவலன், "பொழுது ஈங்குக் கழிந்தது ஆகலின் எழுதும்" *(7:52:6)* என்று கூறியே எழுந்து போனான் என்ற குறிப்பும், கானல்வரிப் பாடல்களைப் பாடி முடித்தபோது மாலைப்பொழுது வந்துவிட்டது என்ற செய்தியை மேலும் தெளிவுறுத்துகிறது.

எனவே, "கானல்வரி"ப் பகுதியில் இடம் பெற்ற கதை நிகழ்ச்சிகள், இருபத் தெட்டு நாள் நிகழ்ந்த இந்திர விழாவுக்குப் பின்னர், மறுநாள் காலை முதல் மாலை வரை நிகழ்ந்தவை என அறிய இக்குறிப்புகள் துணை செய்கின்றன.

## மாதவியின் மலர்க்கடிதம்

கடற்கரையிலிருந்து இல்லந் திரும்பிய மாதவி, தன் துன்பத்தை வெளிப் படுத்தும் மலர்க்கடிதம் வரைந்தாள், இக்கடிதத்தை எடுத்துச் சென்ற வசந்த மாலை, கோவலனைக் கூலவீதியில் கண்டு தந்தாள்; கோவலன் அதனைப் பெற மறுத்து மாதவியை "ஆடல் மகள்" எனப் பழித்தான்; வசந்தமாலை மூலமாக இச்செய்தியை அறிந்த மாதவி, கோவலன் இல்லாத தனிமையால் துயர்ப்பட்டாள். வேனிற் காதையில் கூறப்படும் இந்நிகழ்ச்சிகள், கடற்கரையிலிருந்து திரும்பியபின், அன்றைய முன்னிரவில் நிகழ்ந்தவை.

சித்திரை, வைகாசி ஆகிய இரு மாதங்களும், பழந்தமிழர் பாகுபாட்டின்படி இளவேனிற்காலம். வேனிற்காதை நிகழ்ச்சிகள், வைகாசியின் பிற்பகுதியில் நிகழ் கின்றன. இளங்கோவடிகள்,

இன்னிள வேனில் வந்தனன் இவணென
வளங்கெழு பொதியின் மாமுனி பயந்த
இளங்காற் றூதன் இசைத்தனன் ஆதலின் (8:7-9)

என இளவேனில் நிகழ்ச்சிகளை இக்காதையின் தொடக்கத்தில் குறிப்பிட்டுள்ளார். மாதவி, கடற்கரையிலிருந்து திரும்பியபின் இளவேனிற் காலத்துக்குரிய பள்ளியறையில் இருந்தாள் என்பதை "வானுற நிவந்த மேனிலை மருங்கின், வேனிற் பள்ளி ஏறி" (8:7-18) என வரும் பகுதியால் சுட்டியுள்ளார்.

மேலும், மாதவி, கோவலனுக்கு வரைந்த மலர்க் கடிதத்தில், திங்கள் வானத்தில் தோன்றிய முன்னிரவுப் பொழுதையும் இளவேனிற் காலத்தையும் குறிப்பிட்டு,

மன்னுயி ரெல்லாம் மகிழ்துணை புணர்க்கும்
இன்னிள வேனில் இளவர சாளன்
அந்திப் போதகத்து அரும்பிடர்த் தோன்றிய
திங்கட் செல்வனும் செவ்விய னல்லன் (8:56-59)

என எழுதியிருப்பதாலும் இக்காலக் குறிப்பை அறியலாம். இக்குறிப்புகளால், கடற்கரையிலிருந்து திரும்பிய மாதவி, வைகாசியின் பிற்பகுதியாகிய இளவேனிற் காலத்தில், நிலவு தோன்றிய முன்னிரவில், கோவலனுக்கு மலர்க்கடிதம் எழுதினாள் எனத் தெளிய இயலும்.

வசந்தமாலை, இக்கடிதத்தைக் கூலமறுகில் கோவலனைச் சந்தித்துக் கொடுத்தல், அவன் அதனைப் பெற மறுத்த செய்தியை மாதவியிடம் கூற, அவள் தனிமைத் துயரில் வருந்துதல் ஆகிய கதை நிகழ்ச்சிகளும் அந்த முன்னிரவுப் பொழுதில் தொடர்ச்சியாக நிகழ்ந்துள்ளன.

மாலை வாரா ராயினும் மாணிழை
காலைகாண் குவம்எனக் கையறு நெஞ்சமொடு
பூமலர் அமளிமிசைப் பொருந்தாது வதிந்தனள்
மாமலர் நெடுங்கண் மாதவி தானென் (8:115-118)

என்ற பகுதி, "அன்று இரவு அவன் வராவிட்டாலும் காலையில் உறுதியாக வருவான்" என்ற மாதவியின் நம்பிக்கையையும் தனிமைத் துயரையும் உணர்த்துவதோடு காலக் குறிப்பையும் சுட்டுகிறது.

## கோவலன் கண்ணகியிடம் திரும்புதல்

கடற்கரையில் கானல்வரி பாடிய நிகழ்ச்சி, சிலப்பதிகாரக் கதையின் திருப்புமுனையாக அமைந்திருத்தலால், அன்றைய ஒரு நாள் நிகழ்ச்சிகள், கானல்வரி, வேனிற்காதை ஆகியவற்றில் மட்டுமின்றி, அடுத்துவரும் கனாத்திறமுரைத்த காதையிலும் தொடர்கின்றன.

கனாத்திறமுரைத்த காதையில், கூலமறுகிலிருந்து புறப்பட்ட கோவலன், கண்ணகியிடம் திரும்புதல், தன் பொருளை மாதவியிடம் இழந்தமைக்கு வருந்துதல், சிலம்பை முதலாகக் கொண்டு இழந்த பொருளை ஈட்ட, மதுரை செல்ல முடிவு செய்தல் ஆகிய கதை நிகழ்ச்சிகள் உள. இவை, கானல்வரி பாடிய நாளில், முன்னிரவின் பிற்பகுதியில் நடந்த நிகழ்ச்சிகளாக அமைகின்றன. கானல்வரியில் மாதவியோடு ஊடிப்பிரிதல், வேனிற்காதையில் வசந்தமாலையிடம் கடிதத்தைப் பெறாது மாதவியைப் பழித்துரைத்தல், கனாத்திறமுரைத்த காதையில் கண்ணகி

யிடம் தன் பொருள் இழந்தமைக்காக வருந்திப் புலம்புதல் என இம்மூன்று காதை நிகழ்ச்சிகளிலும் தொடர்ந்து இடம் பெறும் பாத்திரமாகக் கோவலன் உள்ளான். எனவே, கானல்வரி நிகழ்ச்சிகள் அன்றைய மாலைப்பொழுதிலும், வேனிற் காதை நிகழ்ச்சிகள் அன்றைய முன்னிரவின் முற்பகுதியிலும், கனாத்திறமுரைத்த காதை நிகழ்ச்சிகள் அன்றைய முன்னிரவின் பிற்பகுதியிலும் நடந்தனவாகக் கொள் ளல் பொருத்தமாக அமையும்.

இக்கனாத்திற முரைத்த காதையின் தொடக்கத்தில் மாலை நிகழ்ச்சிகள் சில கூறப்பட்டுள்ளன. பகலவன் மறைதல், இல்லங்களில் விளக்கேற்றுதல், மகளிர் இரவுப் பொழுதுக்குரிய கோலம்கொள்ளுதல் முதலியன *(9:1-4)* அவற்றுள் சில. கூலமறுகில், கோவலன் வசந்தமாலையைச் சந்தித்த நேரத்தில் அல்லது அதற்குச் சற்று முன் பின்னாக, நகர்ப்பகுதியில் குடியிருப்புகளில் நிகழ்ந்தனவாக இந்நிகழ்ச்சி களைக் கொள்ளுதல் வேண்டும். இதே நேரத்தில், கண்ணகியின் இல்லத்தில் கண்ணகியும் அவள் பார்ப்பனத் தோழியாகிய தேவந்தியும் காமவேள் கோட்டம் தொழுவது பற்றிய உரையாடலில் ஈடுபட்டிருந்தனர்.

உரையாடலின் முடிவில் கோவலன் இல்லம் வருகிறான். எனவே, கானல்வரி பாடிய அன்றைய நாளின் முன்னிரவின் பிற்பகுதியில் கோவலன் கண்ணகியிடம் திரும்பி வந்தான் என உணரலாம்.

## மதுரைக்குப் புறப்படுதல்

கோவலன், தன் பொருள் இழந்தமைக்காகக் கண்ணகியிடம் வருந்திப் புலம்புதல், கண்ணகி "சிலம்புள கொண்ம்" *(9:73)* எனக் கூறல், இச்சிலம்பையே முதலாகக் கொண்டு இழந்த பொருளை ஈட்டுவேன் என்று கோவலன் உறுதி கொள்ளுதல் ஆகிய நிகழ்ச்சிகள், கோவலன் இல்லம் புகுந்த அன்றைய முன்னிரவின் பிற்பகுதியில் நடந்த தொடர் நிகழ்ச்சிகள்.

இம்முடிவிற்குப் பின்னர், மறுநாள் வைகறைப்போதில் சூரியன் உதிப்பதற்கு முன்னர், கோவலனும் கண்ணகியும் மதுரைக்குப் புறப்பட்டனர்.

> வினைகடைக் கூட்ட வியங்கொண்டான் கங்குல்
> கனைசுடர் கால்சீயா முன் *(9:78-79)*

என்ற பகுதியும், "காதலி கண்ட கனவு" எனத் தொடங்கும் காதையிறுதி வெண் பாவும்,13

> வான்கண் விழியா வைகறை யாமத்து
> மீன்திகழ் விசும்பின் வெண்மதி நீங்க
> காரிருள் நின்ற கடைநாட் கங்குல் *(10:1-3)*

என்ற பகுதியும் இதனைத் தெளிந்த முறையில் மொழிந்துள. மேலும், "குலப்பிறப்பாட்டி யொடு இரவிடைக் கழிதற்கு" *(13.89-90)* என வரும் மாதவியின் இரண்டாம் கடிதத் தொடரும் இக்காலக் குறிப்பை உரைத்துள்ளது.

---

13. காதலி கண்ட கனவு கருநெடுங்கண்
மாதவிதன் சொல்லை வறிதாக்க — மூதை
வினைகடைக் கூட்ட வியங்கொண்டான் கங்குல்
கனைசுடர் கால்சீயா முன்

இந்திர விழா 28 நாட்கள் நடந்து முடிந்த பின் 29ஆம் நாள் கானல் வரிப் பாடல் நிகழ்ந்தது என்றும், பின்னர் 30-ஆம் நாள் வைகறையில் மதுரைக்குப் புறப்பட்ட நிகழ்ச்சி நடந்தது என்றும் அறிய இச்சான்றுகள் நமக்குத் துணை புரிகின்றன.

இந்திர விழா தொடங்கிய நாள் சித்திரை 28-ஆம் தேதி என அடியார்க்கு நல்லார் கூறியுள்ள குறிப்பின்படி, வைகாசி 25-ஆம் தேதியன்று, இந்திர விழாவின் 28 நாள் நிகழ்ச்சிகள் நிறைவு பெற்றன; வைகாசி 26-ஆம் தேதி கானல்வரிப் பாடல் நிகழ்ந்தது. வைகாசி 27ஆம் தேதி கோவலனும் கண்ணகியும் மதுரைக்குப் புறப்பட்டனர் எனக் கொள்ளலாம்.

## புகார்க்காண்ட நிகழ்ச்சிகள்

கோவலன் கண்ணகியின் திருமணத்தில் தொடங்கி, இருவரும் மதுரைப் பயணத்திற்காகப் புகாரை விட்டுப் புறப்படுவதுவரை புகார்க்காண்டத்தின் முக்கிய கதை நிகழ்ச்சிகளாக உள. புகார்க்காண்டக் காதைகளில் மங்கல வாழ்த்துப் பாடல், மனையறம்படுத்த காதை, அரங்கேற்றுகாதை, அந்திமாலைச் சிறப்புச் செய்காதை ஆகிய நான்கு காதைகள், கதையில் பல ஆண்டுக்கால நிகழ்ச்சிகளை விளக்குவன வாகவும், இந்திர விழவூரெடுத்த காதை, கடலாடுகாதை, கானல்வரி வேனிற்காதை, கனாத்திறமுரைத்த காதை, நாடுகாண்காதை ஆகிய ஆறு காதைகள், கதையில் சில நாள் நிகழ்ச்சிகளை விளக்குவனவாகவும் அமைந்துள்ளன.

கோவலனின் 16-ஆம் வயதில் திருமண நிகழ்ச்சி, கண்ணகியோடு வாழ்ந்த காலம் 8 ஆண்டுகள், மாதவியோடு வாழ்ந்த காலம் 12 முதல் 15 ஆண்டுகள் என்ற முடிபுகளைத் தொகுத்து நோக்க, புகார்க்காண்டத்தின் முதல் நான்கு காதை கள் ஏறத்தாழ 20 முதல் 23 ஆண்டுகளுக்குரிய நிகழ்ச்சிகளைக் கூறியுள்ளன என்றும், இந்திர விழாக்காலம் 28 நாட்கள், மறுநாள் கானல்வரி, மறுநாள் மதுரைப் புறப்பாடு என்ற முடிபுகளைத் தொகுத்து நோக்க, புகார்க்காண்டத்தின் இறுதி ஆறு காதைகள் 30 நாட்களுக்குரிய நிகழ்ச்சிகளைக் கூறியுள்ளன என்றும், அறியலாம். இவற்றுள்ளும், இந்திர விழவூரெடுத்த காதையில் முதல் 27 நாள் நிகழ்ச்சிகளும், கடலாடு காதையில் 28-ஆம் நாள் நிகழ்ச்சிகளும் கானல்வரி, வேனிற்காதை, கனாத்திறமுரைத்த காதை ஆகியவற்றில் 29-ஆம் நாள் நிகழ்ச்சி களும் நாடுகாண் காதையில் 30-ஆம் நாள் நிகழ்ச்சிகளும் உரைக்கப்பட்டுள்ளன.

நாடுகாண் காதையின் தொடக்கம், கோவலனும் கண்ணகியும் புகாரை விட்டுப் புறப்பட்ட செய்தியை விளக்குவதோடு, தொடர்ந்து அவர்கள் மேற் கொண்ட வழிப்பயணத்தையும் விளக்குவதாக உள்ளது.

## வழிப்பயணம் தொடங்குதல்

கோவலனும் கண்ணகியும் புகார் நகரிலிருந்து புறப்பட்டு மதுரை சென்று சேர்ந்த வழிப்பயண நிகழ்ச்சிகளை நாடுகாண் காதை முதலாகப் புறஞ்சேரியிறுத்த காதை ஈறாக அமைந்த பகுதிகள் விளக்குகின்றன.

இல்லத்திலிருந்து புறப்பட்ட கோவலனும் கண்ணகியும் உலக விடை கழி என்னும் புகார் நகர வாயிலைக் கடந்து காவிரியின் சங்கமத் துறையையும் கழிந்து சென்றனர். வைகறையில், இல்லத்திலிருந்து புறப்பட்ட இவர்கள் சங்கமத் துறையைக் கடக்கும்போதும் இருள் முற்றிலும் விலகவில்லை. அப்போதுதான்

மக்கள் நாட்காலையில் நீராடுவதற்காகப் பிறர் முகம் நோக்காமல் மறைந்து செல்லும் விடியல் நேரமாக இருந்தது. அடியார்க்கு நல்லார் "கடைமுகங் கழிந்தென்றார், காலையில் நாணீராடுவார் பிறர்முகம் நோக்காது போதற்கு மறைந்து கழிவர்; இவரும் அவ்வாறு கழிந்தார் என்றதற்கு" என்ற உரைக்குறிப் பால்14 இந்நேரத்தைத் தெளிவுறுத்தியுள்ளார்.

சங்கமத் துறையிலிருந்து, மேற்குத் திசை நோக்கி அவர்கள் பயணம் தொடர்கிறது. இங்குதான், கண்ணகி, கோவலனை நோக்கி "மதுரை மூதூர் யாது?" *(10.41)* என வினவுகிறாள். கோவலன் புகாருக்கும் மதுரைக்கும் இடையில் உள்ள தூரம் "முப்பது காதம்" என்பதை, அவளுக்குத் தொலைவு தோன்றாத வண்ணம் "ஆறைங்காதம் நம் அகனாட்டு உம்பர்" *(10.42)* எனப் பதிலுரைக்கின் றான்.

புகார் நகரிலிருந்து மதுரைக்கு உரிய தொலைவு முப்பது காதம் என்ற குறிப்பு இங்குச் சுட்டப்பட்டுள்ளது. வழி நடைப்பயணத்தின்போது, இவர்கள் ஒரு நாளைக்கு ஒரு காத தூரமே நடந்து சென்றனர். இடையே பல நாட்கள் ஆங்காங்கே தங்கியும் சென்றனர்.

காவத மல்லது கடவா ராகிப்
பன்னாட் டங்கிச் சென்றாள்...... *(10.154-155)*

என வரும் பகுதி இதனைச் சுட்டுகிறது. எனவே, முப்பது காதத் தொலைவுடைய மதுரைக்கு உரிய வழிநடைப் பயண நாட்கள் மட்டும் குறைந்தது முப்பது நாட்கள் ஆகும். இடையில் பல நாட்கள் தங்கிச் சென்றதையும் சேர்த்தால் இவர்கள் பயண நாட்களின் எண்ணிக்கை மேலும் கூடுதலாக அமையும். நாடுகாண் காதையின் இறுதிப்பகுதி,15 இவர்கள் சோழ நாட்டு உறையூர் சென்று சேர்ந்த செய்தியை உணர்த்துகிறது.

## முதுவேனிற் காலம்

காடுகாண் காதையில் இவர்கள் ஐயைக் கோட்டம் சென்று சேர்ந்த செய்தி கூறப்பட்டுள்ளது.16 ஐயைக்கோட்டம் சென்று சேர்ந்த காலம் ஆனி, ஆடி மாதங்களுக்குரிய முதுவேனிற் காலம் என்பதை அறியப் பல குறிப்புகள் துணை செய்கின்றன.

வெம்மை மிகுதியால், முல்லையும் குறிஞ்சியும் திரிந்து பாலையாகிய காலத்தில் கோவலனும் கண்ணகியும் இப்பயணம் மேற்கொண்ட செய்தியை மாங்காட்டு மறையோன் கூறுகின்றான். *(11.62-67)*. வெம்மை மிகுதியால் இளைப்புற்றிருந்த கண்ணகியும் கவுந்தியும் நீர்வேட்கையோடு ஒருபுறமாக ஒய்வுகொள்ள, கோவலன் நீர்தேடிச் சென்றிருந்தான் என்ற குறிப்பு *(11:166-167)* உள்ளது. வெம்மை மிகுதியால் இனி நடக்க இயலாது என ஐயைக்கோட்டம் சென்று சேர்ந்தனர் என்றும் *(11.203-204)* கூறப்பட்டுள்ளது.

மேலும் வேட்டுவ வரியின் தொடக்கத்திலும் *(12:1)* புறஞ்சேரி இறுத்த காதையின் தொடக்கத்திலும் *(13:3)* வெம்மை மிகுதி பற்றிய செய்திகள் உணர்த் தப்பட்டுள்ளன. இக்குறிப்புகளால் ஐயைக்கோட்டம் அடைவதற்கு முன்னரும் புறஞ்சேரியைச் சென்று சேர்வதற்கு முன்னரும் கடுங்கோடைக் காலமாக இருந்தது என அறியலாம். எனவே ஆடி மாதம் தொடங்கிய நிலையில் இப்பயணம் நிகழ்ந் திருத்தல் வேண்டும்.

---

14 சிலம்பு .10:32-33 அடி.நல்.உரைவிளக்கம்.

15. சிலம்பு 10:247-248

16 சிலம்பு 11:214-216

## இரவுப் பயணம்

வெம்மை மிகுதியால், பகலில் ஓய்வெடுத்துக்கொண்டு இவர்கள் இரவில் நிலவொளியில் நடந்து தங்கள் பயணத்தைத் தொடர்ந்தனர்.

பகலொளி தன்னினும் பல்லுயி ரோம்பும்
நிலவொளி விளக்கின் நீளிடை மருங்கின்
இரவிடைக் கழிதற்கு ஏதம் இல்லெனக்
குரவரும் நேர்ந்த கொள்கையின் அமர்ந்து *(13:11-14)*

என்ற பகுதியால் இதனை அறியலாம். இரவுப் பயணம் நிகழ்ந்த காலம் ஆடி மாதத்தின் முற்பகுதியாகிய வளர்பிறைக் காலமாக இருக்கலாம். இம்முறையில் தொடர்ந்த பயணம், ஒரு நாள் விடியற்போதில் மதுரை அருகேயுள்ள அம்பணவர் பதியில் முடிந்தது *(13:36-39)*

அம்பணவர் பதியை அடைந்த காலமும் வேனிற் காலத்தின் கடுங் கோடை நாட்கள் நிலவிய வேளையே ஆகும். அம்பணவர் பதியின் புறத்தே கோவலனைக் கண்ட கோசிக மாமணி, இவன் கோவலன்தானா? என உறுதி செய்து கொள் வதற்காக,

கோவலன் பிரியக் கொடுந்துய ரெய்திய
மாமலர் நெடுங்கண் மாதவி போன்றிவ்
வருந்திறல் வேனிற்கு அலர்களைந் துடனே
வருந்தினை போலுநீ மாதவி......... *(13:48-51)*

என மாதவிக் கொடியைப் பார்த்து வினவுவதாக வரும் பகுதியில், வேனிற் காலத்தில் பொலிவழிந்து நிற்கும் மாதவிக் கொடியைச் சுட்டுவதால் இதனை அறியலாம்.

அம்பணவர் பதியிலிருந்து மதுரைக்கு உரிய தொலைவு ஓரிரண்டு நாள் பயணத்திற்கு உரிய அளவேயாகும். "கூடற் காவதம் கூறுமின்" *(13:114)* என்று கோவலன் கேட்டதற்கு, அம்பணவர் பதியிலிருந்த பாணர்கள்,

பொதியிற் றென்றல் போலா தீங்கு
மதுரைத் தென்றல் வந்தது காணீர்
நனிசேய்த் தன்றுஅவன் திருமலி மூதூர் *(13:131-133)*

என விடையிறுப்பதால் இதனை அறியலாம். இதனை அறிந்த பின்னரும் அவர்கள் இரவுப் பயணத்தையே தொடர்ந்து மேற்கொண்டனர். "பின்னையும் அல்லிடைப் பெயர்ந்தனர்" *(13:136)* என இளங்கோவடிகள் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இறுதியில் மதுரையின் புறத்தேயுள்ள புறஞ்சேரியை அவர்கள் அடைந்த னர். இவர்கள் புறஞ்சேரியைச் சென்று சேர்ந்த காலம் காலைப்பொழுது. "காலை முரசக்கனைகுரல் ஓதையும் *(13:140)* பிறவகைக் காலைப்பொழுதுக்குரிய ஓசைகளும் அப்போது இவர்கள் கேட்டதாக வரும் குறிப்புகளால் இதனை அறியலாம்.

## ஊர்வளம் காணல்

புறஞ்சேரியில் அன்றைய பகற்பொழுதும் இரவுப் பொழுதும் அவர்கள் தங்கியிருந்தனர். மறுநாள் காலைப் பொழுதில் கோவலன் மட்டும் தனியனாக மதுரையின் ஊர்வளம் காணச் சென்றான். இவன் புறப்பட்ட காலம், மறுநாள்

காலைப்பொழுதே என்பதை உறுதி செய்யப் "புலரி வைகறை" (14.3) என்றும் "காலை முரசம் கனைகுரல் இயம்ப" (14:14) என்றும் வரும் தொடர்கள் துணை செய்கின்றன.

மதுரையின் ஊர்வளத்தைக் கோவலன் கண்ட நாள் முதுவேனிற் காலம் கழிகின்ற இறுதி நாட்களில் ஒரு நாளாக இருத்தல் வேண்டும்.

என்றூழ் நின்ற குன்றுகெழு நன்னாட்டுக்
காடுதீப் பிறப்பக் கனையெரி பொத்திக்
கோடையொடு புகுந்து கூட லாண்ட
வேனில் வேந்தன் வேற்றுப்புலம் படர
ஓசனிக் கின்ற உறுவெயிற் கடைநாள் (14:121-125)

என வரும் பகுதி இதனைத் தெளிவுறுத்துகிறது. "வேற்றுப்புலம் படர்தற்கு எடுத்துப் பார்க்கின்ற முதுவேனில் கழிகிற நாளில்" என்ற அரும்பதவுரைகாரார் குறிப்பும், "கடை நாள் — பருவத்தின் கடை நாள்" என்ற அடியார்க்கு நல்லார் உரை விளக்கமும் இக்காலக் குறிப்பைத் தெளிவு செய்கின்றன. எனவே ஆனி, ஆடி மாதங்களாகிய முதுவேனிற் காலத்தில், ஆடி மாதத்தில் நான்காம் வாரத்தை ஒட்டிய காலமாக இதனைக் கொள்ளலாம்.

இந்திர விழா தொடங்கிய நாள் சித்திரை 28-ஆம் தேதி என அடியார்க்கு நல்லார் கூறிய குறிப்பின்படி, வைகாசி 25-ல் இந்திர விழா நிறைவு பெற்றது. வைகாசி 26-ல் கானல்வரிப் பாடல் நிகழ்ந்தது, வைகாசி 27-ல் கோவலனும் கண்ணகியும் மதுரை புறப்பட்டனர் என்றும் முன்னரே கண்டோம்.

இங்கு, ஆடி மாதம் 22 முதல் 30 தேதிக்குரிய முதுவேனிற் காலத்தின் இறுதிப் பகுதியில் கோவலன் ஊர்வளம் காணச் சென்றான் என்ற குறிப்பு கூறப்பட்டிருத்தலால், வைகாசி 27-ல் தொடங்கிய கோவலன் கண்ணகியின் மதுரைப் பயணம் ஆடி 22-ல் ஏறத்தாழ முடிந்திருத்தல் வேண்டும் என அறியலாம். எனவே, கோவலன் கண்ணகியின் மதுரைப் பயணம் ஏறத்தாழ 55 நாட்களில் முடிவு பெற்றது என அறியலாம். . முப்பது காதத் தொலைவைக் கடக்க நடந்த நாள் 30-ம், இடையிடையே தங்கிய நாள் 25-ம் ஆனதாகக் கொள்ளலாம்.

## அடைக்கலம் அளித்தல்

கோவலன் மதுரையின் ஊர்வளத்தைக் கண்டு வந்த பின், அன்று இரவும் புறஞ்சேரியிலேயே அனைவரும் தங்கியிருந்தனர். முதல் நாள் காலையில் புறஞ்சேரி வந்த இவர்கள், அன்றைய பகலும், இரவுப் பொழுதும் அங்குத் தங்கியிருந்தனர் என்றும், மறுநாள் ஊர்வளம் கண்ட பகற்பொழுது, மீண்டும் தங்கிய இரவுப் பொழுது, ஆகியவற்றுடன், மாதரியிடம் அடைக்கலம் தந்த மூன்றும் நாள் பகற் பொழுதையும் சேர்த்தால், இவர்கள் புறஞ்சேரியில் தங்கிய கால அளவு மூன்று பகற்பொழுதும் இரண்டு இரவுப் பொழுதுமாகும்.

ஊர்வளம் கண்டு வந்து தங்கியிருந்த இரவுப் பொழுதில்தான் கோவலன் தீய கனவு கண்டான் (15:95-106). இக்கனவுச் செய்தியைக் கேட்ட பின்னரே, கவுந்தியடிகள் இவர்களை மாதிரியிடம் அடைக்கலமாகத் தந்தார். எனவே, கோவலன் ஊர்வளம் கண்டு வந்த மறுநாள் அடைக்கலம் அளித்த நிகழ்ச்சி நடைபெற்றுள்ளது.

### ஆயர்சேரிக்குச் செல்லல்

கவுந்தியடிகளிடம் இவர்களை அடைக்கலம் பெற்ற மாதரி, இவர்களோடு ஆயர்சேரிக்குச் சென்ருள். ஆயர்சேரிக்குள் இவர்கள் சென்ற காலம் மாலைப் பொழுது.

சென்ற ஞாயிற்றுச் செல்சுடர் அமயத்துக்
கன்றுதேர் ஆவின் கனைகுரல் இயம்ப *(15:203-204)*

என வரும் பகுதியில் சூரியன் மறைதல், மாடுகள் மேய்ச்சலிலிருந்து திரும்புதல் முதலிய செய்திகள் உள்ளமையால் இப்பொழுதை அறியலாம்.

இங்கு, மேலும் ஒரு காலக்குறிப்பு உரையால் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. "சென்ற ஞாயிறு" என்பதற்கு "உவாவின் ஞாயிறு" என்றும், "செல்சுடர் அமயம்" என்பதற்கு "இதனையுடைய மாலைப்பொழுது" என்றும் அரும்பதவுரை காரர் இங்குக் குறிப்புகள் வரைந்துள்ளார். இதனுல், கோவலனும் கண்ணகியும் ஆயர்சேரிக்குச் சென்ற நாள் ஆடி மாதம் நிறைமதி நாள் என அறியலாம். இதன் பின்னரே தேய்பிறைக் காலம் தொடங்குகிறது, கோவலன் கொலைக்குப் பின் மதுரை எரியூண்டது தேய்பிறைக்காலம் எனக் கட்டுரை காதையில் *(133-137)* சுட்டப்பட்டிருப்பதோடு, இக்காலக் குறிப்பும் ஒத்துள்ளது காணலாம்.

சித்திரை நிறைமதி நாளில் இந்திர விழாவுக்குக் கொடி ஏற்றப்பட்டது, வைகாசி நிறைமதி நாளில் கடலாட்டு நிகழ்ந்தது; ஆடி நிறைமதி நாளில் கோவலனும் கண்ணகியும் ஆயர் சேரியில் புகுந்தனர் என வரும் இக்குறிப்புகளால் இந்திர விழா தொடங்கியது முதல், கோவலன் கண்ணகி ஆயர்சேரியில் புகுந்தது வரை, ஏறத்தாழ மூன்று மாதங்களுக்கு உரிய நான்கு நிறைமதி நாட்கள் கடந்து சென்றுள்ளன என அறியலாம்.

### இருநாள் நிகழ்ச்சிகள்

கொலைக்களக்காதை, ஆய்ச்சியர் குரவை, துன்பமாலை, ஊர்சூழ்வரி, வழக்குரை காதை, வஞ்சினமாலை, அழற்படு காதை, கட்டுரை காதை ஆகிய மதுரைக் காண்டத்தின் இறுதி எட்டுக் காதைகளுக்குரிய கதை நிகழ்ச்சிகள் அனைத்தும் கோவலன் கொலைப்பட்ட நாளிலும், அதற்கு மறுநாளிலும் நிகழ்ந்த இருநாள் நிகழ்ச்சிகளாக அமைகின்றன. இவற்றுள் முதலில் அமைந்த நான்கு காதை நிகழ்ச்சிகள், ஊர்சூழ்வரி வரை, கோவலன் கொலைப்பட்ட அன்று நிகழ்ந்தன வாகவும், பிற்பகுதியில் அமைந்த கட்டுரை காதை ஈருய நான்கு காதை நிகழ்ச்சிகள் மறு-நாள் நிகழ்ச்சிகளாகவும் கொள்ளத்தக்க வகையில், இந்நூலின் குறிப்புகளும், உரைவிளக்கப் பகுதிகளும் உள்ளன.

### கண்ணகி உணவு சமைத்தல்

ஆடி நிறைமதி நாளின் மாலைப்போதில், கோவலனும் கண்ணகியும் ஆயர் சேரிக்கு வந்தனர் என்ற செய்தியை அடைக்கலக் காதையின் இறுதிப்பகுதி உணர்த்துகிறது.

மறுநாள், அழகிய செம்மண் பூசப்பெற்ற சிற்றிலில், கண்ணகி கோவல னுக்காக உணவு சமைக்கும் முன், காலைப்போதில் மாதரி, ஆய்ச்சியர் சிலருடன் கூடிக் கண்ணகியை நீராட்டினள். "நறுமலர்க் கோதையை நாள் நீராட்டி" *(16:8)* என வரும் தொடர் இதனை உணர்த்துகிறது. கோவலன் சாவக நோன்பி. எனவே, காலைப்போதில், கண்ணகி சமைக்கத் தொடங்கினள்.

சாவக நோன்பிகள் அடிகள் ஆதலின்
நாத்தூண் நங்கையொடு நாள்வழிப் படூஉம்
அடிசில் ஆக்குதற்கு அமைந்தநற் கலங்கள்
நெடியாது அளிமின் நீரெனக் கூற (16:18-21)

என வரும் பகுதி இதனை உணர்த்துகிறது. "நாள் நீராட்டுதல்" (16:8), "நாள் வழிப்படூஉம் அடிசில் (16:19-20) என வரும் தொடர்கள், இவை காலைப்பொழுதுக்கு உரியவை என்பதைச் சுட்டுகின்றன.

அன்றைய காலைப்பொழுதில்தான் அரண்மனைக்கு நெய் அளிக்க வேண்டிய பணி இருந்தமையால், மாதரி, கண்ணகி உணவு சமைக்கத் தேவையான கலங்களை அளிக்கும்படிப் பிறரிடம் கூறினாள். "நற்கலங்கள் நெடியாது அளிமின் நீர்" (16.20-21) என வரும் தொடர் இதனை உணர்த்தும். "நீரளிமினென்றாள், தனக்கு நெய்ம் முறையாதலின்" என வரும் அடியார்க்கு நல்லார் விளக்கமும் இதனைத் தெளிவுறுத்துகிறது.

## ஆய்ச்சியர் குரவையாடுதல்

கண்ணகி சமைத்த உணவை உண்டு, கோவலன் சிலம்பை விற்க மதுரைக்கு புறப்படும் வேளையில், ஆய்ச்சியர் சேரியின் பிறிதொரு பொது இடத்தில் குரவை யாடுவதற்காக ஆய்ச்சியர் எல்லோரும் அங்குக் கூடியிருந்தனர்.

நெய்முறைப் பணி காரணமாக, நெய் எடுக்கச் சென்ற மாதரி, அங்குப் பால் உறையாமலும், வெண்ணெய் உருகாமலும் இருந்ததைக் கண்டாள். தொழு வத்தில் கன்றுகள் துள்ளவில்லை; பசுக்கள் மெய்ந்நடுங்கி அரற்றின. இத்தீய குறி களைக் கண்டு, ஆய்ச்சியர்களோடு, உற்பாத சாந்தி செய்ய, மாதரி, அச்சேரியின் பொது மன்றத்துக்குச் சென்றிருந்தாள்.

கோவலன் கண்ணகியிடம் விடை பெறும் வேளையில், ஆய்ச்சியர் எல்லோ ரும் பிறிதோரிடத்தில் குரவையாடக் கூடியிருந்தனர். எனவே, கண்ணகியைத் தனி யாளாக விட்டுச் செல்ல, கோவலன் மனம் மறுகினான். "காதலி தன்னை, ஒருங்குடன் தழீஇ உழையோ ரில்லா, ஒரு தனி கண்டுதன் உள்ளகம் வெதும்பி" (16:94-96) என இளங்கோவடிகள் இத்தனிமையைச் சுட்டியுள்ளார். அடியார்க்கு நல்லாரும் "இதில் உழையோரில்லா எனவும், ஒருதனி கண்டு எனவும் கூறினர், ஆய்ச்சியர் எல்லாம் குரவையாடப் போனமை தோன்ற" என இச்சூழலைத் தெளிவுபடுத்தி யுள்ளார்.

மாதரி, நெய்ம்முறைப் பணிக்காகச் சென்ற காலம் அன்றைய காலைப் பொழுது. "பாண்டியன் கோயிலிற் காலைமுரசம் கனைகுரல் இயம்புமாகலின்" (17:1:5-6) என வரும் தொடரால் இக்காலக் குறிப்பை அறியலாம். ஆய்ச்சியர் குரவையாடிய அன்றே கோவலன் கொலைப்பட்டான். கொலைக்களக்காதையின் முற்பகுதி நிகழ்ச்சிகளும், ஆய்ச்சியர் குரவைப் பகுதி நிகழ்ச்சிகளும் ஒரே நேரத்தில் இரு வேறு களங்களில் நடந்த நிகழ்ச்சிகளாகப் படைக்கப்பட்டுள்ளன. கொலைக் களக்காதையின் பிற்பகுதி, கோவலன் கொலையுண்ட செய்தியைக் கூறுகிறது. அரும் பதவுரைகாரர் "காலைவாய்த் தழுவினள் மாலைவாய்க் கண்டாள் (19:36-37) என்கையால், குரவையாடியது கோவலனுர் கொலையுண்ட அன்றே என்க" என இதனைத் தெளிவுறுத்தி விளக்கம் தந்துள்ளமையாலும் இதனை அறியலாம்.

## கொலைச் செய்தியை அறிதல்

ஆய்ச்சியரின் குரவைக் கூத்துக்குப் பின்னர், வையைக்கரையில் உள்ள திருமால் கோவிலுக்கு வழிபடச் சென்ற மாதரி, கோவலன் கொலைச் செய்தியை அறிந்து திரும்பினாள். ஆய்ச்சியர் பேசிய குறிப்பினால், கொலைப்பட்டவன், தன் கணவன் கோவலனே என்பதறிந்து கண்ணகி பொங்கி எழுந்தாள்.

கணவன் வரவேண்டிய நண்பகல் நேரத்திலிருந்தே கண்ணகியின் நெஞ்சம், ஏதோ ஒரு தீங்கு நிகழப்போகிறது என்பதை உணர்ந்து துன்புற்றிருந்தது.

> நன்பகற் போதே நடுக்குநோய் கைம்மிகும்
> அன்பனைக் காணாது அலவுமென் நெஞ்சன்றே *(18:15:1-2)*

என்னும் பகுதியில், கணவன் திரும்பாமல் இருந்தது கண்டு, அவன் வரவேண்டிய நன்பகற்பொழுது முதலாகவே, கண்ணகியின் உள்ளம் துன்புற்றிருந்த செய்தியை அறியலாம்.

கோவலன் கொலைப்பட்டான் என்று உணர்ந்த கண்ணகி "காய்கதிர்ச் செல்வனே, கள்வனோ என் கணவன்" *(18.55)* என வினவ, "கள்வனோ வல்லன்" *(18:52)* எனச் சூரியன் விடையிறுப்பதாகத் துன்பமாலையின் இறுதிப் பகுதி அமைந்துள்ளது. "காய்கதிர்ச் செல்வன்" என்ற குறிப்பினாலும் இந்த வேளை நண்பகற்போது என அறியலாம். குரவையாடிய ஆய்ச்சியர் கோவலன் கொலைச் செய்தியை மாதரி வாயிலாக அறிந்து ஆங்காங்கே மயங்கி நின்று மறுகியிருக்கும் வேளையில், அவர்கள் முன்னிலையிலேயே, கண்ணகி, சூரியனை நோக்கி இவ்வினா வைத் தொடுத்தாள். இதனை

> வாய்வதின் வந்த குரவையின் வந்தீண்டும்
> ஆய மடமகளிர் எல்லீரும் கேட்டீமின் *(18.47-48)*

என வரும் முன்னிலை விளியால் அறியலாம்.

## வெட்டுண்ட உடலைக் காணுதல்

கண்ணகி ஆயர்சேரியிலிருந்து புறப்பட்டு, மதுரை நகர வீதிகளெல்லாம் "அல்லலுற்று ஆற்றாது அழுது" *(19:15)* திரிந்தாள். ஆங்கிருந்த "கம்பலை மாக்கள்" அவள் கணவனின் வெட்டுண்ட உடலைக் காட்டினர். கண்ணகி, தன் கணவனின் உயிரற்ற உடலைக் கண்ட நேரம், அவன் கொலைப்பட்ட அன்றைய நாளின் மாலைப்பொழுது, அப்பொழுதுதான் சூரியன் மறையும் நேரம்.

> செம்பொற் கொடியனையாள் கண்டாளைத் தான்காணான்
> மல்லன்மா ஞாலம் இருளூட்டி மாமலைமேற்
> செவ்வென் கதிர்சுருங்கிச் செங்கதிரோன் சென்றொளிப்பப்
> புல்லென் மருண்மாலைப் பூங்கொடியாள் பூசலிட
> ஒல்லென் ஒலிபடைத்த தூர் *(19.30-34)*

என வரும் பகுதியால் இக்காலக் குறிப்பை இளங்கோவடிகள் தெளிவுறுத்தியுள்ளார்.

அன்று காலையில் கணவனை உயிரோடு தழுவி விடை கொடுத்து அனுப்பிய கண்ணகி, அன்று மாலையில் கணவனின் உயிரற்ற உடலைத் தழுவினாள் என்று அவலச் சுவையில் தோய்த்தும் இக்காலக் குறிப்பை இளங்கோவடிகள் சுட்டியுள்ளார்.

வண்டார் இருங்குஞ்சி மாலைதன் வார்குழல்மேல்
கொண்டாள் தழீஇக் கொழுநன்பால் காலைவாய்ப்
புண்டாழ் குருதி புறஞ்சோர மாலைவாய்க்
கண்டாள் அவன்றன்னை (19.35-38)

என்பது அப்பகுதி.

மாலை முதல், மறுநாள் விடியும்வரை, கண்ணகி, தன் கணவனின் உயிரற்ற உடல் கிடந்த இடத்திலேயே "அமுதேங்கி நிலத்தின் வீழ்ந்து" (19:64) கிடந்தாள். அன்றைய இரவுதான் கோவலனின் வெட்டுண்ட தலை ஒன்று சேர்ந்து, பழு தொழிந்து எழுந்திருந்தான்" (19:66). "எழுதெழில் மலருண்கண் இருந்தைக்க" (19.67) எனச் சொன்னான். இரவு நேரத்தில் நிகழ்ந்த இந்த அற்புதத்தை "மாயங்கொல் மற்றென்கொல் மருட்டியதோர் தெய்வங்கொல்" (19.68) எனப் பலவாறாக எண்ணுகிறாள் கண்ணகி.

இரவெல்லாம் இந்த அற்புதக் காட்சியைப் பற்றியும், பாண்டியனைக் கண்டு நீதி கேட்பது பற்றியும், தான் முன்பு கண்ட தீக்கனவைப் பற்றியும் பலவாறாகச் சிந்தித்த கண்ணகி, விடிந்ததும் அரசன் அரண்மனைக்குச் சென்றாள். (19:68-75)

## கோப்பெருந்தேவியின் கனவு

கோவலன் கொலைப்பட்ட அன்று இரவு, பாண்டியன் மனைவி கோப்பெருந் தேவி ஒரு தீக்கனா கண்டாள். செங்கோலும் வெண்கொற்றக் குடையும் நிலத்தில் வீழ்ந்தன; அரண்மனை வாயிலில் உள்ள மணி ஒலித்தது, எண் திசையும் அதிர்ந் தன; கதிரை இருள் விழுங்கியது; இரவில் வானவில் தோன்றியது; பகலில் விண்மீன்கள் விழுந்தன. இத்தகைய கனவைக் கோப்பெருந்தேவி கண்டாள், "வருவதோர் துன்பமுண்டு" (20:12) என இத்தீய கனா உணர்த்தியது.

கண்ணகி, தன் கணவனின் வெட்டுண்ட உடலுக்கு அருகில் மயங்கி, மறுகிப் புலம்பிய அதே இரவில், கோப்பெருந்தேவிக்கு இத்தீய கனா தோன்றியது.

காலையில், இக்கனவுச் செய்தியை மன்னனுக்கு உரைத்தாள். இச்செய்தியை அறிந்த பின்னரே அரசமன்றம் கூடியது.

கோப்பெருந் தேவி சென்றுதன் தீக்கனாத் திறமுரைப்ப
அரிமா னேந்திய அமளிமிசை இருந்தனன்
திருவீழ் மார்பிற் றென்னர் கோவே (20:21-23)

என இவ்விரு நிகழ்ச்சிகளையும், இளங்கோவடிகள் இணைத்தே கூறியுள்ளார்.

அரசமன்றம் கூடிய அதே வேளையில், வாயிற்புறத்தில் கண்ணகி வாயி லோனை விளித்து, மன்னனுக்குத் தன் வருகையை உணர்த்துமாறு கூறுகிறாள். ஒரே நேரத்தில் நடந்த இரு வேறு களக் காட்சிகளை "இப்பால்" என்ற சொல் லாட்சியால் இளங்கோ வேறுபடுத்திக் காட்டியுள்ளார்.

அரிமா னேந்திய அமளிமிசை இருந்தனன்
திருவீழ் மார்பிற் றென்னர் கோவே. இப்பால்
வாயி லோயே வாயி லோயே (20.22-24)

என்பது அப்பகுதி.